www.padippakam.com

125

Riya

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்




COLOMBES
SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும்

(சில உண்மை விளக்கங்கள்)

YA
67 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
-SEINE ; FRANCE

அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

# காணிக்கை

எமது இயக்கத்தில் தொடக்க காலத்தில் இருந்து இயக்கத்துக்கு ஏற்பட்ட இடர்இழப்புகளில் பங்கு கொண்டவரும், இயக்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவரும், குறிப்பாக திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை உருவாக்கி வளர்த்தவரும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்துக்கு எதிராக வெற்றிகரமாக நடவடிக்கைகள் பல எடுத்தவருமான லெப்டினண்ட் கேர்னல் சந்தோசம் (உமைநேசன்) அவர்கள் இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் செய்த துரோகத்தை எதிர்த்துப் போராடிய வேளையில் வீர மரணம் அடைந்தார். அந்த வீரமறவனுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறோம்.



லெப்டினண்ட் கேர்னல் சந்தோசம் (க. உமைநேசன்)

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும் சில உண்மை விளக்கங்கள்

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாம் இரத்தம் சிந்தி, எத்தனையோ மகத்தான தியாகங்களைப் புரிந்து, எத்தனையோ இன்னல்களை அனுபவித்து, சிங்களத் தீவிரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டெடுத்த யாழ்ப்பாணப் பிரதேசம் இன்று இந்திய இராணுவத்தின் வல்லாதிக்கத்தின் கீழ் வீழ்ச்சி அடைந்துள்ளது. நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த எமது சொந்த மண்ணில், நாம் சுதந்திரமாக உலவிக் களித்த எமது தாய் பூமியில் இன்று இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்து எம்மை அடிமைப்படுத்தி வருகின்றது. முதலில் போர்த்துக்கேயர், அடுத்ததாக ஒல்லாந்தர் (ஹாலந்து), பின்பு ஆங்கிலேயர், அடுத்து சிங்களவர், இன்று இந்தியர் என கிட்டத்தட்ட 500 ஆண்டுகள் வரை ஈழத்தமிழினம் தொடர்ச்சியாக அன்னிய காலனிய ஆதிக்கத்தின் கீழ் நசுக்கப்பட்டு வருகின்றது. இதில் இந்திய ஆக்கிரமிப்பு, தமிழினத்திற்குச் செய்யும் அப்பட்டமான வரலாற்றுத் துரோகமாகும். தமிழீழத்தில் அமைதியைப் பேணி, தமிழீழ மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து, சுயாட்சி மாநிலம் பெற்றுத் தருவதாக இங்கு வந்த இந்திய இராணுவம், எமது தாய்ப் பூமியைச் சுபஹீகரம் செய்து, எமது மக்கள் மீது அதர்மமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது மிகவும் நயவஞ்சகமான நம்பிக்கைத் துரோகமாகும்.

இன்று தமிழீழத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடும் ஆட்சி நடைபெறுகின்றது. என்றுமில்லாதபடி எமது மக்கள் இம்சைப்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்திய இராணுவ வெறியாட்டம் சிங்கள அரச பயங்கரவாதத்தையும் மிஞ்சி நிற்கின்றது.

இந்தியாவின் நேசசக்தியாக விளங்கி வந்த எமது மக்கள் சமுதாயத்தின் மீது பாரதம் ஏன் இந்த பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது?

இந்திய அரசு ஏன் எம்மீது இந்த அதர்மமான யுத்தத்தைத் தொடுத்திருக்கின்றது?

படிப்பகம்

www.padippakam.com



இந்திய அரசு விடுதலைப்புலி இயக்கத்தை ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டி நிற்பது ஏன்?

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் முக்கிய அம்சமான மாகாணசபைத் திட்டத்தையும் எமது மக்கள் மீது திணித்துவிட இந்தியா ஏன் பகீரத முயற்சி செய்கின்றது?

மாகாணசபைத் திட்டத்தின் அடிப்படையான குறைபாடுகள் என்ன?

இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் எழுந்த முரண்பாடுகளும், அதன் மூலகாரணங்களும் என்ன?

இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராட நாம் ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டோம்?

இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான பதில் அளித்து எமது நிலைப்பாட்டை மக்களுக்கு எடுத்து விளக்குவதுதான் இந்தப் பிரசுரத்தின் நோக்கம்.

இந்திய அரசானது தனது பிரச்சார சாதனங்களைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு திட்டமிட்ட விசமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. தமிழ்மக்களின் உரிமைக்குரலாக விளங்கி வந்த பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டைப் போட்டு விட்டு உலகப் பத்திரிகையாளர்களின் வருகையைத் தடை செய்துவிட்டு, உண்மையை உலகிற்கு இருட்டடிப்பு செய்து கொண்டு, இந்திய அரசு தனது பொய்ப்பிரச்சார யுத்தத்தையும் எம்மீது தொடுத்துள்ளது. எமது விடுதலை இயக்கத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்துவதோடு, எமது மக்கள் மீது சுமத்தப்பட்ட துன்பங்களுக்கு எல்லாம் எம்மையே காரணகர்த்தாக்களாகக் காட்டி, மக்களிடம் இருந்து எம்மை அன்னியப்படுத்தி, மக்கள் நலனில் அக்கறை அற்ற ஒரு மக்கள் விரோத சக்தியாக எம்மை சித்தரித்துக் காட்டுவதே இந்தியப் பிரச்சாரத்தின் நோக்கம். இந்தத் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்திற்குச் சவாலான ஒரு உண்மை விளக்கமாக, இந்த அறிக்கையை நாம் மக்கள் முன்னிலையில் வைக்கின்றோம்.

முதலில் இந்திய அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் மத்தியிலான உறவு பற்றியும், இந்த உறவில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வந்த முரண்பாடு பற்றியும்,

படிப்பகம்

www.padippakam.com



இந்த முரண்பாடுகள் கூர்மையடைந்து இறுதியில் மோதலாக வெடித்ததின் காரணங்கள் பற்றியும் இங்கு எடுத்து விளக்க விரும்புகிறோம்.

1977ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறிய ஜெயவர்த்தன அரசு தமிழீழ மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையைக் கூர்மைப் படுத்தியதுடன் தமது வெளிவிவகாரக் கொள்கையையும் மேற்கத்தைய முதலாளித்துவத்தின் நலன்களுக்குச் சார்பாக நெறிப் படுத்தியது. இந்தியப் பிராந்திய வல்லாட்சியின் பிடியில் இருந்து விடுபட்டு மேற்கத்தைய ஏகாதிபத்தியக் கூட்டணியின் அடிவருடி நாடாகத் தன்னை ஆக்கிக் கொள்வதால் தனது பொருளாதாரத்தையும், முதலாளித்துவப் பாதையில் வளப்படுத்துவதோடு, தமிழரை இனரீதியாக ஒழித் துக்கட்டவும் வாய்ப்பாக அமையுமென ஜெயவர்த்தன அரசு கருதியது. இதன் அடிப்படையில் உருவான இலங்கை அரசின் இந்தப் புதிய வெளிவிவகாரக் கொள்கை இந்தியப் பிராந்திய வல்லாதிக்கத்திற்கும், பூகோள அரசியல் நலன்களுக்கும் அச் சுறுத்தலாக அமைந்தது. 1983 ஜூலையில் இனப் பூகம்பமும், அதனையடுத்து ஜெயவர்த்தன மேற்கத்தைய ஏகாதிபத்திய நாச கார சக்திகளின் உதவியை நாடியதும் இந்தியாவிற்கு மேலும் அச்சத்தை ஊட்டியது. இந்தச் சூழ்நிலையிற்தான் இந்திய அரசு ஈழத்தமிழினத் தேசிய இனப் பிரச்சனையில் தலையிட்டது. வெளிப்படையாக ராஜதந்திர ரீதியாகவும், மறைமுகமாக இராணுவ ரீதியாகவும் இந்தத் தலையீடு அமைந்தது. மத்தி யஸ்தம் என்ற போர்வையில் கொழும்பில் பேச்சுக்களை ஆரம் பித்த அதேவேளை, மறைமுகமாக தமிழீழப் போராளிகள் அமைப்புக்களுக்கு இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கி ஆயுதப்போராட்டத்தை விரிவுபடுத்தவும் இந்தியா திட்டம் தீட்டியது. இந்தியாவின் இந்தத் தலையீடு ஆனது தமி ழீழ மக்களின் நலன்களைப் பேணி அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படவில்லை. ஆயுதப்போராட்டத்தை விஸ்தரித்து, இன நெருக்கடியை மேலும் கூர்மையடையச் செய்து, போராளி அமைப்புக்கள் மூலம் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்து, இராஜதந்திர ரீதியாக ஜெயவர்த்தன அரசை வென்றெடுத்து, இலங்கை யைத் தனது ஆதிக்க வியூகத்துக்குள் கொண்டு வருவதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது. அதாவது, ஈழத்தமிழர் பிரச்சனையைத் தனது வல்லாதிக்கத்தின் நலன்களுக்குப் பயன் படுத்த இந்திய அரசு முயன்றது.

படிப்பகம்

www.padippakam.com


தமிழீழப் போராளிகளுக்கான இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தையும், முன்னாள் பாரதப் பிரதமரான இந்திரா காந்தி அம்மையார் இந்திய உளவுத்தாபனமாகிய 'ரா' விடம் கையளித்தார். இந்த உளவுத்தாபன அதிகாரிகள் **தன்னிச்சையாகச் செய்த** சில செயல்கள், போராளி அமைப்புக்களை பிரிவு படுத்தி, மோதவிட்டு ஒரே கட்டுக்கோப்பான தேசிய விடுதலை இயக்கம் உருவாகாமல் தடுத்ததுடன், போராளி அமைப்புக் களை இந்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூலிப் படைகளாகச் செயல்படச் செய்வதாகவும் அமைந்தன.

இவர்கள் கையாண்ட இந்த யுக்திகள் எமது இயக்கத்திற்கும் 'ரா' விற்கும் மத்தியில் விரிசல்களை உண்டுபண்ணியது. இந்தச் சதி வேலைகளுக்கு 'ரா' விற்கு உறுதுணையாக நின்று செயற்பட்டவர் சந்திரகாசன் என்பதையும் நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக 'ரா' அதிகாரிகள் சந்திரகாசனுடன் தொடர்பு கொண்டனர். அப்போது சென்னையில் சாமி, ரவிமேனன் எனப்படும் 'ரா' அதிகாரிகள் இயங்கி வந்தனர். இவர்கள் சந்திரகாசனின் நண்பர்கள். 1983ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியப் பயிற்சித்திட்டம் பற்றி சந்திரகாசனுக்கு அறிவிக்கப்பட்டது. விடுதலை அமைப்புக்களைச் சிபாரிசு செய்யும் பொறுப்பும் அவரிடம் கொடுக்கப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற ஒரு கட்டுக்கோப்பான விடுதலை அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. அவ்வேளை எமது இயக்கத்தலைவர் பிரபாகரனும் ஏனைய தளபதிகளும் தமிழீழக் களத்தில் நின்று போராடி மகத்தான இராணுவச் சாதனைகளைப் புரிந்து வந்தனர். இராணுவ, அரசியல் பிரிவுகள் விஸ்தரிக்கப்பட்டு உள்ளூர் பயிற்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, சர்வதேசரீதியாகக் கிளைகள் திறக்கப்பட்டு, எமது இயக்கம் சுயமான முறையில் இயல்பான வளர்ச்சி கண்டுவந்த காலகட்டத்தில் ஏனைய அமைப்புக்கள் எல்லாம் சிதறுண்டு, செயலிழந்து கிடந்தன. இயக்கத் தலைமைகள் தமிழீழத்தில் இருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் ஒதுங்கி இருந்தன. இந்தச் சூழ்நிலையில்தான் சந்திரகாசனின் சூழ்ச்சிப்படலம் ஆரம்பமாகியது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழீழ அரசியல் அரங்கில் ஒதுக்கப்பட்ட சந்திரகாசன் இந்தியப் பயிற்சித் திட்டத்தையும் 'ரா' வின் நட்புறவையும் பயன்படுத்தி அரசியல் தலைமைப்பீடத்தைக் கைப்பற்றக் கனவு கண்டார். தனக்குக் கீழ்ப்படிவும் விசுவாசமும் மட்டுமன்றி, தன்னைத் தலைவராக ஏற்றுக்கொள்ளும் அமைப்புக்களை வளர்த்துவிட அவர் திட்டம் தீட்டினார். இந்த வகையில் தமிழீழ விடுதலை இயக்கத்தையும் (டெலோ) அதன் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தையும் வளர்த்துவிட சந்திரகாசன் முடிவு செய்தார். அந்தக் காலகட்டத்தில் டெலோ இயக்கம் அமைப்பு வடிவம் எதுவுமற்ற 6 பேரை மட்டும் கொண்ட சிறு குழுவாக, சென்னையில் செயலற்றுக் கிடந்தது. சந்திரகாசனின் தலையீடு செத்துப்போய்க்கிடந்த டெலோவிற்கு மறுவாழ்வை அளித்தது.

ஒரு தெளிவான சித்தாந்தமும் உறுதியான கொள்கைத் திட்டமும் இல்லாத காரணத்தினால் டெலோ இயக்கத்தை முதன்மைப்படுத்தி வளர்த்துவிட 'ரா' வும் விரும்பியது. தனித்துவமான கொள்கையும், இலட்சியப்பற்றும் இல்லாத குழு ஒன்றை இராணுவரீதியாக வளர்த்துவிட்டு, இந்தியாவின் கூலிப்படையாக அதை இயங்கச் செய்வதே 'ரா' வின் நோக்கமாக இருந்தது.

டெலோ இயக்கத்திற்குப் பயிற்சித் திட்டம் ஆரம்பமானது. அந்தக் காலகட்டத்தில் ஜூலை இனக்கலவரமும் சிங்களப் பேரினவாதத்தின் வெறியாட்டமும் தமிழீழத்தில் விடுதலை எழுச்சியைத் தூண்டிவிட்டிருந்தது. சிங்கள அரசின்மீது வெறுப்பும், ஆத்திரமும் கொண்ட தமிழ் இளைஞர் சமுதாயம் ஆயுதப்போராட்டத்தில் குதிக்க ஆயத்தமாக இருந்தது. இந்தப் புரட்சிகரச் சூழ்நிலையைப் பயன்படுத்தி டெலோ இயக்கம் தனது ஆள திரட்டும் வேலையை ஆரம்பித்தது. எந்தவொரு தேர்வு ஒழுங்கு முறையுமின்றி, கண்டபடி ஆள்சேகரிப்பு நடந்தது. இதனால் சமூகவிரோத சக்திகளும் இவ் இயக்கத்தில் பெருமளவு ஊடுருவின. ஸ்ரீசபாரத்தினத்தின் இராணுவத் தலைமையின்கீழ் சந்திரகாசன் ஒரு கூலிப்பட்டாளத்தை உருவாக்கினார். இதற்கிடையில் ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்), ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அணியினரும் சந்திரகாசனிடம் சரணடைந்து பயிற்சித்திட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.

இந்தியாவின் இந்தத் தலையீடு தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் இயல்பான பரிணும வளர்ச்சியையும்.

படிப்பகம்

www.padippakam.com

அதன் புரட்சிகரத் தன்மையையும் வெகுவாகப் பாதித்தது. விடுதலை அமைப்புக்கள் மத்தியிலான உறுப்பினர் தொகையும், இராணுவ பலமும் தலைகீழாக மாற்றப்பட்டது. செயற்கையான திடீர் வீக்கத்தால் ஈழத்தமிழரின் சுதந்திர இயக்கம் களங்கமுற்றது. ஒழுக்கம், கட்டுப்பாடு அற்ற ஆயுதக்கும்பல்கள் அதிகரித்ததால் அராஜகம் தலைதூக்கியது. இந்தியாவின் இத் தலையீட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே.

தமிழீழ ஆயுதப் போராட்டக் களத்தில் இருந்து எம்மை முற்றாக ஒதுக்கிவிட்டு, டெலோவின் இராணுவத் தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை அமைத்து, தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்த முயற்சித்தார் சந்திரகாசன். பிரபாகரனோ, விடுதலைப்புலி இயக்கத்தினரோ தன்னை ஒருபோதும் தமிழீழ மக்களின் தலைவராக வரித்துக் (ஒப்புக்) கொள்ள மாட்டார்கள் என்பது சந்திரகாசனுக்கு நன்கு தெரியும். விடுதலைப் புலிகளின் சுயமான போக்கும் நேர்மையும், கொள்கை உறுதியும், வளைந்து கொடாத தன்மையும், தனது நாசகார அரசியல் சூழ்ச்சிக்கு உகந்த பண்புகளல்ல என உணர்ந்து கொண்ட சந்திரகாசன், விடுதலைப்புலிகளை இந்தியப் பயிற்சித் திட்டத்தில் இருந்து ஒதுக்கிவிட முயற்சித்ததோடு டெலோ இயக்கம் மூலம் புலிகளை அழித்து விடலாம் எனவும் திட்டம் தீட்டினார். சந்திரகாசனின் சூத்திரதாரப் பொறிக்கிடங்குக்குள் சிக்கிவிட நாம் விரும்பவில்லை. அதேவேளை இந்தியாவின் கூலிப்படையாகவும் இயங்க நாம் தயாராக இல்லை. ஆயினும் இந்தியாவின் உதவியை நாம் பெறாது போனால் ஏனைய அமைப்புக்களின் இராணுவப் பலத்துக்கு ஈடுகொடுக்க முடியாது நாம் அழிந்து போக நேரிடும். எமது அழிவு, தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக முடியும். எனவே, இந்திய அரசு மிகவும் காலம் தாழ்த்தி எம்மை அணுகி, எமக்கு வரையறுக்கப்பட்ட அளவில் உதவி தர முன்வந்ததை நாம் ஏற்றுக் கொண்டோம். எமக்கு வரையறுக்கப்பட்ட அளவில் உதவி கிடைத்தது. ஆயினும், நாம் எமது சொந்த முயற்சியினால் பயிற்சி முகாம்களை அமைத்து, இயக்க வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி, இராணுவ அமைப்பை விஸ்தரித்தோம். **இந்தியாவை எதிர்பாராது எமது சுயமுயற்சியான** திட்டங்களின் மூலம் எமது ஆயுத பலத்தையும் பெருக்கிக் கொண்டோம். இதனால் இராணுவ சமபலத்தை மாற்றி அமைத்து, விடுதலைப் புலிகளைப் பல

படிப்பகம்

www.padippakam.com


வீணப்படுத்தும் 'ரா' வின் சதித்திட்டத்தை நாம் முறியடிக்க முடிந்தது.

இதற்கிடையில் டெலோ, ஈபிஆர்எல்எப், ஈரோஸ் அணியினர் சந்திரகாசனின் தூண்டுதலின்பேரில் ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டனர். ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈஎன்எல்எப்) என இதற்குப் பெயர் சூட்டப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தனிமையாக ஒதுக்கிவிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி (டியுஎல்எப்), தமிழீழ மக்கள் விடு தலைக் கழகம் (பிளாட்) மற்றும் சகல விடுதலை அமைப்புக்களை யும் இந்த முக்கூட்டு முன்னணியுடன் சேர்த்து, ஈழத்தமிழர் தேசியக் கவுன்சில் ஒன்றை உருவாக்கி அதன் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றவும் சந்திரகாசன் முனைந்து வந்தார். இதற்கான பேச்சுக்களும் சென்னையில் நடைபெற்றன. இந்தத் தேசியக் கவுன்சில்களுக்கான யாப்பு (விதிமுறை) [illegible] தயாரிக்கப்பட்டது. இதன் பின்னணியில் 'ரா' வும் செயற் பட்டது. அமெரிக்காவில் இருந்த சில தமிழ்ப் பிரமுகர்களும் இந்தத் தேசிய சபையை உருவாக்கி சந்திரகாசனுக்கு கிரீடம் சூட்ட அயராது முயன்றனர்.

தமிழ்ப் போராளி அமைப்புக்களைப் பகடைக்காய்களாக வைத்து நடைபெற்ற இந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தை முறியடித்து, அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தி, விடுதலை அமைப்புக்களிடையே விரிசலையும் மோதலையும் தவிர்த்து, இந்தியாவை எதிர்பார்க்கும் நிலையில் இருந்து விடுபட்டு போராட்டத்தை முன்னெடுக்க நாம் முடிவு செய்தோம். இந்த உன்னத நோக்குடன் நாம் ஈழத் தேசிய விடுதலை முன்னணி அமைப்புடன் கூட்டுறவாகச் செயற்பட்டு, ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்க முயன்றோம். ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி, சந்திரகாசனுக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களுக்கும் மத்தியில் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி, சந்திரகாசனின் ஆதிக்கத்தில் இருந்து முற்றாக விடுபட்டு, சோசலிசப் புரட்சிப் பாதையில் போராட்டத்தை முன்னெடுக்க வரும்படி வலியுறுத்தி வந்தோம். ஆனால் டெலோ, ஈபிஆர்எல்எப் போன்ற அமைப்புக்கள் அரசியல் ஆலோசனை, நிதியுதவி போன்ற விஷயங்களில் சந்திரகாசனிடம் தங்கி இருந்ததால் எமக்கு மத்தியில் முரண்பாடுகள் தலைதூக்கின. விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் மத்தியில் ஒற்றுமை ஏற்படாமல் பார்த்துக்கொள்

படிப்பகம்

www.padippakam.com


வதில் சந்திரகாசன் ஒருபுறமும் 'ரா' மறுபுறமுமாக பகீரத முயற்சிகள் செய்து வந்தனர். இதற்கிடையில் தமிழீழத்தில் டெலோ இயக்கத்தினரின் அட்டகாசங்களும் அடாவடித்தனங் களும் பெருகத் தொடங்கின. எமது இயக்க உறுப்பினர்களும், பொதுமக்களும் மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர். டெலோ தலைமைப்பீடத்திடம் நாம் தொடர்ந்து முறையிட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஒரு சகோதரத் துவ யுத்தத்திற்கு 'ரா' வும் தூபமிட்டு வந்தது.

எமது உடன்பிறப்புக்கள் 'ரா' நாசகாரத் திட்டத்தை உணர்ந்து கொள்ளாது எம்மோடு மோதத் துணிந்தனர். இந் திய அரசு தமக்குப் பக்கபலமாக நிற்பதாகக் கருதிக்கொண்டு எம்மை ஒழித்துக்கட்ட முற்பட்டனர். மோதல் வெடித்தது. எமது வீரர்களின் போர்த்திறமையாலும், மக்களின் ஆதரவு காரணமாகவும் டெலோ இயக்கத்தினரை நாம் நிராயுதபாணி களாக்க முடிந்தது. 'ரா' எதிர்பாராத எமது வெற்றியும், டெலோவின் வீழ்ச்சியும் இந்திய உளவுத் தாபனத்திற்கும் எமக்கும் மத்தியில் முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தியது.

'ரா' எனப்படும் உளவு ஸ்தாபனம் இந்திய அரச அமைப் பில் ஒரு முக்கிய அம்சம். இந்திய வெளிவிவகாரக் கொள்கை யையே இந்த உளவு ஸ்தாபனம் பிரதிபலிக்கின்றது. பாரதப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இது இயங்குவதால் இந்திய அரச கருவியாகவே இந்த ஸ்தாபனம் செயல்படுகின் றது. எனவே 'ரா' வின் செயல்பாடுகளை இந்திய வெளிவிவ காரக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே நாம் கருதவேண் டும். எனினும் இந்த உளவு ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் தன்னிச்சையாக தமது விருப்பு வெறுப்பின்படி நடந்து கொண்டனர். சிலர் சி.ஐ.ஏ. யுடன் தொடர்பு கொண்டு தேசத்துரோகமும் புரிந்தனர். டி.ஐ.ஜி. உன்னிகிருஷ்ணன் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த இவர், தமிழீழப் போராளி அமைப்புகளுடனான தொடர்புகளுக்குப் பொறுப் பாக இருந்தார். போராளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி, கொடுக்கப்படும் ஆயுதங்கள், இயக்கங்களின் ஆட்பலம், போர்முறைத் திட்டங்கள், யுக்திகள் இப்படியாக சகல தகவல் களையும் இவர் இலங்கை அரசுக்குக் கொடுத்து வந்தார். இந்தத் தகவல்களின் அடிப்படையில்தான் சிங்கள ஆயுதப்படைகள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமது படையெடுப்புத் திட்டங்களை உருவாக்கின. சில மாதங்

படிப்பகம்

www.padippakam.com


களுக்கு முன்புதான் உன்னிகிருஷ்ணன் சி.ஐ.ஏ. ஏஜண்ட் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இப்போது டெல்லியில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றார். இந்திய அரசுடன் நட்புறவைப் பலப்படுத்தி இந்தியாவின் ஒரு நேச சக்தியாகச் செயல்படவே நாம் விரும்புகின்றோம். பாரதம் தென்னாசியாவில் ஒரு பெரிய வல்லரசு. இந்துமா சமுத்திரத்திலும், அதில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவிலும் இந்தியாவின் பூகோள அக்கறையும் தேசிய நலன்களும் உள்ளன என்பது எமக்குத் தெரியாதது அல்ல. நாம் இந்தியாவின் தேசிய நலன்களையோ, பூகோள அரசியல் அபிலாசைகளையோ கௌரவிக்கத் தவறவில்லை. அப்படி இருந்தும் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தனது தேசிய நலனுக்கு முரணான சக்தியாகக் கணித்து எம்மை ஒழித்துக்கட்ட முயற்சிப்பது ஏன் என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் தேசிய நலனைப் பிரதிபலிக்கும் ஒரு விடுதலை அமைப்பான வடிவத்தைப் பெற்றுள்ளது; இந்த நலன்களைப் பேணுவதிலும் உறுதியாக இருக்கின்றது. தமிழீழ மக்களின் தாயகம், இறைமை, சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படையான கோரிக்கைகளில் எமது இயக்கம் இறுக்கமான நிலையைக் கடைப்பிடித்து வருகின்றது. ஆனால் இந்திய அரசோ தமிழீழ மக்களின் தேசிய நலனில், தேசிய ஒருமைப்பாட்டில், தேசியத் தாயகத்தில் அக்கறை எதுவும் கொண்டிருக்கவில்லை. மாறாக, இந்த அடிப்படைக் கோரிக்கைகளை எதிர்க்கின்றது. தமிழீழம், தாயகம், சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளை மறுக்கின்றது; சமஷ்டி அமைப்பைக்கூட முன்னெடுக்கத் தயங்குகின்றது. ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் குறைந்தபட்ச சலுகைகளுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா முயல்கிறது. அதாவது, சிங்கள இனவாத ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பேணி, இலங்கை அரசைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்ளவே விரும்புகின்றது. இதனால் தனது தேசிய, பூகோள நலன்களைப் பேணலாம் என இந்தியா கருதுகின்றது. இந்தக் கொள்கை அடிப்படையில்தான் இந்திய அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுந்தது.

தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்ந்து அரசியல் வடிவம் பெறுவதையும்,

படிப்பகம்

www.padippakam.com


இப்போராட்டத்தை முன்னெடுக்க ஒரு தேசிய விடுதலை இயக்கம் வளர்வதையும் இந்தியா விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் இப்பாதையில் வீறுநடை போட்டு வளரு வதைக் கண்டு இந்தியா அஞ்சியது. இந்த வளர்ச்சியைத் தடுக் கவும், எமது இயக்கத்தைப் பலவீனப்படுத்தவுமே ஏனைய அமைப்புக்கள் ஆயுதரீதியில் வளர்க்கப்பட்டு எமக்கு எதிரான சக்திகளாக உருவாக்கப்பட்டன. இந்த தந்திரோபாயங்களை உணராத எமது உடன்பிறப்புக்கள் இந்தியாவின் ஏவல் நாய்களாகச் செயல்பட்டு, எமது இயக்கத்தை அழித்துவிடவும் துணிந்தனர். இந்தச் சூழ்நிலையில் டெலோ இயக்கம் எம்மால் நிராயுதபாணியாக்கப்பட்டது, இந்தியாவிற்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. எமது உடன்பிறப்புக்களைக் கொண்டே எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என உறுதி பூண்ட இந்திய அரசு ஈபிஆர்எல்எப் இயக்கத்திற்குப் பெரு மளவு நவீன ஆயுதங்களை வழங்கியது. சகோதரத்துவ யுத்தங் களை முடுக்கி விடுவதற்கு இந்தியா முயன்றதில் வேறு கார ணங்களும் உண்டு. விடுதலைப் போராளிகள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்கின்றார்கள் என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டு, விடுதலை அமைப்புக்கள் மீது மக்களுக்கு வெறுப்பை யும், விரக்தியையும் உண்டு பண்ணவும் இந்தியா திட்ட மிட்டது. அதன்படியே இயக்க மோதல்கள் வெடிக்கும் பொழுது இந்தப் பிரச்சார யுக்தியையும் கையாண்டது. 'ரா' விடம் இருந்து ஏராளமான ஆயுதங்களையும், வெடி மருந்து களையும் பெற்றுக்கொண்ட ஈபிஆர்எல்எப் இயக்கத்தினர் விடுதலைப்புலிகளை இராணுவரீதியாக ஒழித்துக்கட்டத் திட்டம் வகுத்தனர். இந்தச் சதித்திட்டம் பற்றி எமக்குச் சான்றுகள் கிடைத்ததால் நாம் உடனடியாக இந்த இயக்கம்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அவர்களையும் நிரா யுதபாணியாக்கினோம். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இயக் கம் பலம் வாய்ந்த தனி அமைப்பாகத் தமிழீழத்தில் மக்களின் ஆதரவோடு வளர்ந்தது. எம்மைப் பலவீனப்படுத்தி, ஒழித்துக் கட்ட 'ரா' வகுத்த சூழ்ச்சித்திட்டங்களை முறியடித்துவரும் அதேவேளை, தமிழீழ யுத்தக்களத்திலும் நாம் எதிரியுடன் போராடி எமது மக்களைப் பாதுகாக்கும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தோம். எமது வீரத்தையும், தியாகத்தையும், விடு தலைப்பற்றையும் கண்டு வியந்த எமது மக்கள் எமது இயக்கத் திற்குப் பேராதரவு வழங்கினர். ஒரு தேசிய இயக்கமாகப் பரந்துபட்ட வெகுஜனத்தின் ஆதரவுடன் நாம் வளர்ந்து வரு வது இந்திய அரசுக்கு எம்மீது எரிச்சலைத் தூண்டியது. எம்மை

படிப்பகம்

www.padippakam.com



ஒழித்துக்கட்டத் தகுந்த தருணத்தையும், சூழ்நிலைகளையும் இந்தியா எதிர்பார்த்துக் காத்திருந்தது.

இவ்வாண்டு ஜனவரியில் சிங்கள இனவாத அரசு யாழ் குடாநாட்டில் பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தியதுடன் வடக்கிலும் கிழக்கிலும் பெரியளவிலான இராணுவப்படை யெடுப்பையும் மேற்கொண்டது. வடக்கில் மட்டும் 20,000 துருப்புக்கள் வரை யுத்தத்தில் குதித்தன. எமது கெரில்லா அணிகள் பல்வேறு அரங்குகளில் சிங்கள ஆயுதப்படையி னரை எதிர்கொண்டு வீராவேசத்துடன் போர் புரிந்து வந் தன. ஆயுதங்கள், வெடிமருந்துகள் பற்றுக்குறையுடன் நாம் எதிரியைச் சமாளித்துக் கொண்டிருந்தோம். எதிரியின் ஆகா யக்குண்டுவீச்சுக்கள், 'பீரங்கி மோட்டார்' செல் தாக்குதல் களிலும் இராணுவ வெறியாட்டத்திலும் பல நூற்றுக்கணக் கான அப்பாவிப் பொதுமக்கள் மடிந்தவண்ணம் இருந்தனர். இந்த இக்கட்டான யுத்தசூழ்நிலையில் நாம் இந்திய அரசிடம் ஆயுத உதவியை நாடினோம். எமது மக்கள் இனப்படு கொலைக்கு இலக்காகி வருகின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, எமது மக்களைப் பாதுகாப்பதற்கு உதவிசெய்யுமாறு நாம் பாரதத்திடம் பல தடவைகள் கோரிக்கைகளை விடுத் தோம். எமது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதாகக் கூறிக் கொண்ட பாரதம் மௌனமாக இருந்தது. நாம் கோரிய ஆயு தப்பட்டியலின் விவரங்கள், எமது வெடிமருந்துப் பற்றுக்குறை கள் போன்ற முக்கிய இராணுவத் தகவல்களைச் சேகரித்து 'ரா' அதிகாரி திரு உன்னிகிருஷ்ணன் இலங்கை அரசிற்குச் சமர்ப்பித்தார். இந்தத் தகவல்களின் அடிப்படையில் சிங்கள இராணுவம் தனது போர் உபாயங்களை வகுத்து, ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தீவிரப்படுத்தியது. இந்த இக்கட்டான யுத்தச் சூழ் நிலையில், களத்தில் நின்று போராடிய எமது இயக்கத்திற்கு ஆயுத உதவியளித்து, எமது மக்களைப் பாதுகாக்கத் தயங்கிய இந்தியா, தமிழ்நாட்டில் செயல் இழந்து சிதறிக்கிடந்த சமூக விரோதக் கும்பல்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்க முன்வந்தது. இந்த நடவடிக்கையானது எமக்கு இந்தியா மீதி ருந்த நம்பிக்கையைத் தகர்த்தது. இதிலிருந்து இந்திய அரசின் நோக்கம் எமக்குத் தெளிவாகியது.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பலம் வாய்ந்த இராணுவ சக்தியாக உருவெடுத்து சிங்கள ஆயுதப்படையினரைத் தோற் கடிப்பதை இந்தியா விரும்பவில்லை. சிங்கள ஆயுதப் படைகள் புலிகளை அழித்து இராணுவரீதியாகப் பலவீனப்படுத்தவேண்

படிப்பகம்

www.padippakam.com



டும்; புலிகளால் மக்களைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை உருவாக வேண்டும்; மக்கள் மத்தியில் புலிகள் மீதிருந்த நம்பிக்கை தளர்வேண்டும்; அந்தச் சூழ்நிலையில் தமிழீழ இரட்சகர் என்ற போர்வையில் நேரடியாக இராணுவரீதியாகத் தான் தலையிட வேண்டும்; இப்படித்தான் இந்திய அரசு திட்டமிட்டது. அதே சமயம், இந்தியா ஜெயவர்த்தன அரசை மிரட்டிப் பயமுறுத்தியது. ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கி சிங்கள ஆயுதப்படைகளை முறியடிப்போம்; பெரிய அழிவுகளை உண்டு பண்ணுவோம்; எந்த ஒரு ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து எந்தவித உதவியைப் பெற்றாலும் யுத்தத்தில் வெல்ல முடியாது செய்வோம் என்ற ரீதியில் ஜெயவர்த்தனவும் இந்திய அரசால் மிரட்டப்பட்டார். இந்தியாவுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் தமிழீழப் போராட்டத்திற்கு முடிவு கட்டி, இலங்கையின் ஆளும்வர்க்க நலன்கள் பாதிக்கப்படாதவாறு பிரச்சனையை இந்தியா தீர்த்து வைக்கும் எனவும், ஜெயவர்த்தனவுக்குத் தெரிவிக்கப்பட்டது. வடமராட்சி 'ஆபரேஷன் லிபரேஷன்' வெற்றியளித்ததாக மகிழ்ச்சியும் உற்சாகமும் பெற்றிருந்த ஜெயவர்த்தன, புலிகளின் நெல்லியடி தாக்குதலினால் மனமுடைந்து போனார். (தற்கொலைப் படையைச் சார்ந்த கரும்புலி காப்டன் மில்லர், தன்னை அர்ப்பணித்து நடத்திய தாக்குதலில், நெல்லியடி இராணுவ முகாமின் மூன்று மாடிக் கட்டிடம் முற்றாகத் தகர்க்கப்பட்டதுடன், எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.) அதைத் தொடர்ந்து இந்தியாவும் விமானம் மூலம் உணவுப்பொட்டலங்களைப் போட்டு இலங்கை அரசை மிரட்டியது. இந்தச் சூழ்நிலையில் தான் இந்தியாவுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள ஜெயவர்த்தன இணங்கினார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றி விமர்சிப்பதற்கு முன்னர் இலங்கையில் இராணுவப் படையெடுப்பையும், அதுபற்றிய இந்தியாவின் நிலைபாட்டையும் இங்கு கவனிப்பது முக்கியம். சிங்கள இனவாத அரசு தனது முழு இராணுவப் பலத்தையும் பிரயோகித்து தமிழினப் படுகொலையைத் தீவிரப்படுத்தியபோது இந்திய அரசு எந்த விதமான உருப்படியான நடவடிக்கையையும் எடுக்காது, வெறும் கண்டன அறிக்கைகளை மட்டும் வெளியிட்டுவிட்டு மௌனம் சாதித்தது. தமிழரின் பேரழிவையும் பொருட்படுத்தாது ஜெயவர்த்தனவின் அன்பைப் பேணுவதில் இந்தியா சிரத்தை காட்டியது. தமிழரின்

படிப்பகம்

www.padippakam.com



நலனில் இந்தியா அக்கறை கொண்டிருந்தால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்கித் தமிழ் மக்களின் அழிவைத் தடுத்திருக்க முடியும். ஆனல் இந்தியா அதை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்தால் தனது இராணுவத் தலையீட்டுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என இந்தியா கருதியது. ஒரு அப்பட்டமான இனப்படுகொலையைத் தடுக்க வேண்டுமென்ற மனிதாபிமான நிலைபாட்டைக் கைவிட்டு, தனது பூகோள நலன்களில் மட்டுமே இந்திய அரசு அக்கறை காட்டியது என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த ஒப்பந்தமானது இந்தியாவினதும் இலங்கையினதும் ஆளும்வர்க்க நலன்களை மட்டுமே பேணுவதால் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனவும் ஒருவரை ஒருவர் புகழ்ந்துரைத்துக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெயவர்த்தனவைப் பொறுத்தவரை இது அவருக்குக் கிட்டிய ஒரு பெரிய இராஜ தந்திர வெற்றியாகும். தமிழீழக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விடுதலைப் புலிகளை முழுமையாக நிராயுதபாணிகளாக்க இந்தியா முன்வந்தமை சிங்கள இனவாத ஆளும் வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கோடி கோடியாகக் கொட்டி வளர்த்த சிங்கள இராணுவமும், மேற்கத்தைய நாசகார உளவு சக்திகளும், வெளிநாட்டுக் கூலிப்படைகளும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை இந்திய அரசு சாதிக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை ஜெயவர்த்தன அரவணைத்துக் கொண்டதில் ஆச்சரியம் இல்லை. இந்தியாவிற்கும் இந்த ஒப்பந்தம் பெரும் திருப்தியை அளித்திருந்தது. இலங்கையில் அன்னிய சக்திகளின் ஊடுருவல்களைத் தடுத்து, இலங்கைத் தீவைத் தனது வல்லாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தமை இந்திய பூகோள-அரசியல்-வர்த்தக நலன்களைப் பேணுவதாக அமைவதால் இந்தியாவிற்கும் இது ஒரு ராஜ தந்திர வெற்றிதான்.

ஆனல் ஜெயவர்த்தனவின் இனவெறிக் கொள்கைக்கும், இந்திய வல்லரசின் பூகோள நலனுக்கும் பலிக்கடா ஆனவர்கள் தமிழீழப் பொது மக்களும், விடுதலைப் புலிகளும் ஆவர். ஜெயவர்த்தன அரசைத் தனது ஆதிக்க வலைக்குள் வீழ்த்துவதற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக இந்திய அரசினல் மேற்கொள்ளப்பட்ட இந்த ராஜதந்திர சூதாட்டத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com



**20,000 த்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் பலியாகி இருக்கின்றார்கள். 2000 த்துக்கும் மேற்பட்ட போராளிகள் இறந்து இருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பல கோடிக்கணக்கான தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. எமது ஒடுக்கப் பட்ட மக்களின் இனப்பிரச்சனையை, அவர்களின் ஜீவாதாரப் பிரச்சனையை ஒரு யுத்தகளமாக மாற்றி, ஒரு ரத்தக்களரியாக மாற்றி அதன் மூலம் தனது தேசிய நலனை அடைந்து கொண்ட இந்தியாவின் இந்த இழிவான நடவடிக்கை, எமது மக்களுக்குச் செய்யப்பட்ட ஒரு மன்னிக்க முடியாத துரோகமாகும்.**

இந்திய-இலங்கை ஒப்பந்தம் அல்லது ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம் தமிழீழ மக்களின் நலன்களையோ அன்றி அவர்களின் அரசியல் அபிலாசைகளையோ, பாதுகாப்பையோ பேணவில்லை. மாறாக, தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள இனவாத ஆட்சியின்கீழ் ஒடுக்கப்பட்டு வருவதற்கு இந்த ஒப்பந்தம் வழி கோலியுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் அடங்கி இருக்கின்றன.

(1) இந்திய-இலங்கை வெளிவிவகார உறவு பற்றியது,

(2) தமிழர் தேசியப் பிரச்சனையில் தீர்வு பற்றியது.

இந்தியா தென்னாசியாவில் ஒரு மாபெரும் வல்லரசு. இந்தியா தனது அயல்நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதையோ, தனது நாட்டின் ஸ்திர நிலைக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதையோ, தனது நாட்டின் பிரதேசப் பாதுகாப்பையும் சமாதானத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதையோ நாம் ஆட்சேபிக்கவில்லை. இலங்கையில் ஊடுருவிய அன்னிய நாசகார சக்திகள் வெளியேற்றப்படுவதையும் நாம் ஆதரிக்கின்றோம். இந்துமாசமுத்திரம் ஒரு சமாதான பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படுவதையும் நாம் வரவேற்கின்றோம். ஆனால் இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பூகோள நலன்களைப் பேணுவதோடு நின்றுவிடவில்லை. இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனத்தவரின் நலன்களை மட்டுமே பேணும் இனவாத அரசியல் ஆட்சிமுறைக்கு முண்டு கொடுத்து, ஜெயவர்த்தனவின் ஜனநாயக விரோத சர்வாதிகாரத்திற்கு வலுவூட்டி, தமிழரின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணச் சில யோசனைகளையும் இந்த ஒப்பந்தம் முன் வைக்கிறது. இன்னுமொரு விதத்தில் சொல்லப்போனால்,

படிப்பகம்

www.padippakam.com


இந்த ஒப்பந்தம் இந்திய-இலங்கை வெளிவிவகார உறவுடன் நின்றுவிடாது, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையிலும், தமிழரின் தேசியப் பிரச்சனையிலும் தலையிடுவதாக அமையப் பெற்றிருக்கிறது. சிங்கள மக்களையோ, தமிழ் மக்களையோ கலந்தாலோசிக்காது, அவர்களது அங்கீகாரம் பெறாது, ஜனநாயக முறையில் பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாத ஒரு அரசாங்கத்துடன் இந்தியா இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றது. ஆகவே, இந்த ஒப்பந்தம் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள தேசிய இனங்கள்மீது திணிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்றே சொல்ல வேண்டும். தமிழீழ மக்களைப் பொருத்தவரை இந்த ஒப்பந்தமானது அவர்களது அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பேணுவதாக அமையவில்லை.

இந்த ஒப்பந்தமானது தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவில்லை; இலங்கையில் வாழும் பல்லின மக்களின் ஒரு சமூகக் குழுவாகவே தமிழீழ மக்களை அங்கீகரிக்கின்றது.

இந்த ஒப்பந்தமானது தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை மறுக்கின்றது. பதிலாக, இலங்கையின் ஒற்றையாட்சி முறையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகின்றது.

இந்த ஒப்பந்தமானது தமிழர் தாயகத்தையும், அந்தத் தாயகத்தில் தமிழரின் ஒருமைப்பாட்டு உரிமையையும் அங்கீகரிக்கவில்லை. தற்காலிகமான வடக்கு கிழக்கு இணைப்புப்பற்றிக் குறிப்பிட்டபோதும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மாநிலத்தைப் பிரிவுபடுத்தும் ஆபத்தான விதிகளையும் கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த ஒப்பந்தம் தமிழரின் அடிப்படையான பிரச்சனைகளை அணுகாமல், தமிழரின் தாயகத்தையும், தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் ஆபத்தான அம்சங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது.

அடுத்ததாக, ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சனையின் தீர்வுக்கு மாகாணசபைத் திட்டத்தையே இந்த ஒப்பந்தம் முன்வைக்கின்றது. இந்த மாகாணசபைத் திட்டத்திலும் அது வழங்கும் அரசியல் பரவலாக்கத்திலும் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எமது விடுதலை இயக்கம் ஏற்கனவே இம் மாகாண சபை யோசனைகளை நிராகரித்து உள்ளது.

மாகாணசபைத் திட்டத்தில் ஜனாதிபதிக்கு அளவிற்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதையும், அவசரகாலச் சட்

படிப்பகம்

www.padippakam.com


டத்தைப் பிறப்பித்து, மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடம் கொடுபட்டு இருப்பதையும் ஒரு முக்கியக் குறைபாடாக நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். சட்டம் இயற்றும் அதிகாரம், நிறைவேற்றும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மட்டில் மாகாண சபை சட்ட மன்றத்திற்கு மிஞ்சிய வகையில் தேசிய பாராளுமன்றத்திற்குக் கூடிய அதிகாரங்கள் இருப்பதையும், நாம் குறிப்பிட்டிருந்தோம். மாகாண போலிஸ் சேவை, தேசிய போலிஸ் கமிசனுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு நிர்வாக ஆட்சி அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் நாம் தெளிவுபடுத்தி இருந்தோம். அதிமுக்கியமாக தமிழ்ப்பிரதேச காணி உரிமை, குடியேற்றம் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழரின் நில உரிமை பேணப்படவில்லை என்பதையும், அத்துமீறிய சட்டரீதியற்ற சிங்களக் குடியேற்றங்களை அகற்றும் வழிமுறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் எடுத்துரைத்தோம். ஒட்டுமொத்தத்தில் மாகாணசபைத் திட்டம் தமிழரின் உரிமைகளையும், நலன்களையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் திட்டத்தை நாம் ஏற்கனவே நிராகரித்துள்ளோம். கடந்த சில வருடங்களாக கொழும்புக்கும் டெல்லிக்கும் காவடி எடுத்து, இந்த மாகாணசபைத் திட்டம்பற்றிப் பேச்சுக்களை நடத்தி, அத்திட்டத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்க உதவியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களே. அதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது சம்பந்தமாகவும் சமீபத்தில்கூட இவர்கள் கொழும்பில் பேச்சுக்களை நடாத்தி இருக்கின்றார்கள். அப்படியிருந்தும், இன்று இந்தக் கூட்டணித் தலைவர்கள் மாகாணசபைத் திட்டத்தில் எந்தவித அதிகாரமும் இல்லை என இத்திட்டத்தைக் கண்டித்திருப்பதாகத் தெரிகின்றது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக ஆதரித்துக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தில் முக்கிய அம்சமானதும், தமிழரின் அடிப்படைப் பிரச்சினை சம்பந்தமானதுமான மாகாணசபைத் திட்டத்தைக் கண்டிக்கும் கூட்டணித் தலைமையின் துரோகத்தனமான அரசியலை எமது மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். கூட்டணித் தலைமையின் தூரநோக்கமற்ற, சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் கொள்கைதான் இன்று எமது மக்களின் துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை என்ப

படிப்பகம்

www.padippakam.com



தற்காலிகமே நாம் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க மறுத்தோம். எமது மக்களை நாம் நேசிப்பதாலும், எமது மக்களின் நலன் களில் உண்மையான அக்கறை எமக்குண்டு என்பதாலும் இந்த ஒப்பந்தம் எமது மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை அளிக்காது என்ற நிலைப்பாட்டை நாம் மேற்கொண்டோம். இந்த நிலைப்பாட்டில் என்ன தவறு இருக்கின்றது?

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சனை சம்பந்தமாக எமது கருத்தைத் தெரிவிக்கும் ஜனநாயக உரிமைகூட எமக்கு இல்லையா?

கருத்துச் சுதந்திரம்கூட எமக்கு இல்லையா?

தர்மத்தின் இருப்பிடம் என்றும், ஜனநாயகத்தின் பாது காவலன் என்றும் கூறிக்கொள்ளும் பாரதநாடு எமக்கு ஏன் இந்த ஜனநாயக உரிமையை—கருத்துச் சுதந்திரத்தைத் தர மறுக்கின்றது?

எமது இயக்கத்தின்மீது எத்தனையோ நிர்ப்பந்தங்கள் இடப் பட்டன. அழுத்தங்கள் போடப்பட்டன. பயமுறுத்தல்கள் விடப்பட்டன. இறுதியில் எம்மீது ஒரு முழு அளவிலான யுத் தம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றது. இராணுவப் பயங்கர வாதம் மூலம், ஆயுதமுனையில் நாம் அச்சுறுத்தப்படு கின்றோம்.

இதுதான் பாரத தர்மமா?

இதுதான் பாரத ஜனநாயகமா?

எமது பிரச்சனை சம்பந்தமாக பாரதநாடு நேர்மையுடனும், நீதியுடனும் நடந்துகொள்ளவில்லை. ஜனநாயகப் பண்புகளைப் பேணி மனிததர்மத்துடன் நடந்துகொள்ளவில்லை. மனிதாபி மானத்துடன் நடந்து கொள்ளவில்லை. மாறாக, ஒரு வல்லரசுக் குரிய எதேச்சாதிகாரத்துடன், அகம்பாவத்துடன், எம்மை ஏதோ வேண்டப்படாத அன்னியர்கள்போல மிரட்டிப் பய முறுத்தி, அடித்துத் துன்புறுத்தி, கொலை புரிந்து, கொள்ளை யடித்து இராணுவப் பயங்கரவாதம் மூலம் எம்மை மிருகத்தன மாக நடத்துகின்றது. இந்தியா தொடுத்துள்ள இந்த அதர்ம மான யுத்தம் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக் கும் அற்பமான நோக்கத்தைக் கொண்டது அல்ல. அப்படி இருந்தால் ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்களின்மீது இந்த இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவேண்டிய

படிப்பகம்

www.padippakam.com


அவசியமே இல்லை. இது தமிழீழ மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடாத்தப்படும் யுத்தம். தமிழீழ மக்களின் விடுதலை எழுச்சியை நசுக்கி, அவர்களை ஆயுதமுனையில் பயமுறுத்தி, ஜெயவர்த்தனாவின் நிரந்தரமான அரசியல் அடிமைகளாக்கும் நோக்கத்தைக் கொண்டதுதான் இந்த யுத்தம்.

அமைதி காக்கும் பணி என்ற பாசாங்கில், இந்திய இராணுவம் எமது தாய் மண்ணில் காலடி எடுத்துவைத்த காலத்தில் இருந்தே எம்மோடு ஒரு யுத்தத்தைத் தொடுத்து வடக்கையும் கிழக்கையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்தது. இந்திய இராணுவம் இங்கு வந்து இறங்கியபோது ஒரு முழு அளவிலான யுத்தத்திற்குத் தயாரான முறையில் கனரக ஆயுததளவாடங்களைக் கொண்டுவந்து சேர்த்தது. அமைதி காக்க வந்தவர்களுக்கு இத்தகைய ஆயுதங்களுக்கு அவசியமே இருந்திருக்காது.

தற்காலிக அரசு என்றும், தமிழ் போலிஸ் படை என்றும் மாநில சுயாட்சி என்றும், நிரந்தரமான சமாதான சகவாழ்வு என்றும் இந்திய அரசு மேடையேற்றிய பொம்மலாட்டங்கள் எல்லாம் எம்மை ஏமாற்றுவதற்குக் கையாண்ட இராஜதந்திர யுக்திகளே அன்றி வேறொன்றுமில்லை. புலிகளிடம் தற்காலிக ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும் நோக்கம் இந்திய அரசுக்கு இருந்திருந்தால், ஏனைய அமைப்புக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் அவர்களை இங்கு கொண்டுவந்து எம்மோடு மோதுவதற்குத் தூண்டி விட்டது ஏன்?

நாம் கணிசமான தொகையில் ஆயுதங்களைக் கையளித்த பின்னரும் எமக்கு உறுதியளித்ததுபோல் இடைக்கால அரசை நிறுவாமல், சிங்களக் குடியேற்றத்தையும், சிங்கள அரச நிர்வாகத்தையும் வடக்கு கிழக்கில் இந்திய அரசு அனுமதித்தது ஏன்? இந்தப் பிரச்சனைகளை முன்வைத்து திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதம் அனுஷ்டித்தபோது அவனது போராட்டத்தை ஆதரித்துத் தமிழீழம் அடங்கிலும் வெகுஜனக் கிளர்ச்சி வெடித்தது. தமிழீழ மக்களின் ஏகோபித்த அபிலாசையாகக் கிளர்ந்த அந்தச் சாத்வீகப் போராட்டத்தை இந்திய அரசு கொச்சைப்படுத்தியதுடன், வேண்டுமென்றே காலம் கடத்தி, திலீபனின் உயிரையும் குடித்தது. எமது மக்களின் நலன்களில் அக்கறை இருந்தால், உண்மையான கரிசனை இருந்தால் இந்திய அரசு எமது திலீபனைக் காப்பாற்றி இருக்கலாம் அல்லவா? எமது பிராந்தியத் தளபதிகளான குமரப்பா,

படிப்பகம்

www.padippakam.com



புலேந்திரன் ஆகியோரையும் மற்றும் எமது மூத்த உறுப்பினர்களையும் இந்திய அரசு அநியாயமாக சாகவிட்டதன் அந்தரங்க நோக்கமென்ன? தமிழீழ மக்களின் நெஞ்சங்களை உலுப்பிய இந்த அகால மரண நிகழ்ச்சியை இந்திய அரசு நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம் அல்லவா? இந்த யுத்தத்திற்குக் காரணகர்த்தாக்கள் நாம்தான் என்று இந்திய அரசு இன்றும் எமக்கு எதிராக விசமப்பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாண மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத் தளபதி திரு. புலேந்திரன், மட்டக்களப்பு முன்னாள் தளபதி திரு. குமரப்பா ஆகியோர் அநியாயமாகக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக கிழக்கில் வன்முறை வெடித்து 100 க்கும் அதிகமான சிங்கள மக்கள் கொல்லப் பட்டபோது அந்த நிகழ்ச்சியை ஒரு அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி; எம்மீது இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவெடுத்தது. ஆனால், இந்தியா தொடுத்த இந்த யுத்தத்தால் உயிரிழந்த தமிழர்கள் எத்தனை பேர்? ஊனமடைந்தவர்கள் எத்தனை பேர்? வீடிழந்தவர்கள் எத்தனை பேர்? தமிழர்களின் இரத்தத்தால் சிங்கள இனவாத அரக்கனைத் திருப்திப்படுத்துவதற்கு இந்தியா இந்த அநியாயமான யுத்தத்தைத் தொடுத்து இருக்கின்றது.

கடந்த அக்டோபர் மாதம் 10ஆம் நாள் ஆரம்பமான இந்த யுத்தத்தில், இந்திய இராணுவம், பொதுமக்களின் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் போர்த்தருமங்கள் எதையும் பேணாது, மிகவும் மிலேச்சத்தனமான முறையில் நடந்துள்ளது. குடிமனைகள்மீது தொடர்ச்சியான பீரங்கி மோட்டார் 'செல்' தாக்குதல்களையும், ஆகாயக்குண்டு வீச்சுக்களையும் நடாத்தி ஏராளமான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தது. சிங்கள இராணுவத்தை மிஞ்சும் வகையில், இந்தியச் சிப்பாய்கள் வெறியாட்டம் ஆடி அப்பாவிப் பொதுமக்களைக் கண்டபடி சுட்டுக் கொலை செய்திருக்கின்றார்கள். தமிழ்ப்பெண்கள் மிருகத்தனமான முறையில் அவர்களால் கற்பழிக்கப்பட்டிருக்கின்றார்கள். வீடுகள் கடைகளில் கொள்ளையடித்தல், தீ வைத்தல் போன்ற பயங்கரவாதச் செயல்களில் இந்தியப் படைகள் ஈடுபட்டிருக்கின்றார்கள்; மருத்துவமனைகளில் புகுந்து நோயாளிகளையும், காயமடைந்த வர்களையும் சுட்டுக் கொலை செய்திருக்கின்றார்கள்; அகதி முகாம்கள், கோவில்களில் தஞ்சமடைந்த அகதிகள் மீது குண்டு பொழிந்திருக்கிறார்கள். இது

படிப்பகம்

www.padippakam.com



வரை இந்த யுத்தத்தில் 1000 -க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்களை இந்திய இராணுவம் கொன்று குவித்திருக்கின்றது. பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலர் சிகிச்சை பெறமுடியாத நிலையில் செத்துப் போனார்கள்.

இந்த யுத்தமானது புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பிடுங்கும் நோக்கத்தை மட்டும் கொண்டதல்ல. இது பரந்துபட்ட வெகுஜனங்களுக்கு எதிராக நடத்தப்படும் அதர்மமான ஒரு யுத்தம். இராணுவப் பயங்கரவாதத்தின் மூலம் தமிழீழப் பொதுமக்களை மிரட்டி, பயமுறுத்தி அடக்குமுறைக்குள் வைத்திருப்பதுதான் இதன் நோக்கம்.

இராணுவ நடவடிக்கையுடன் நின்றுவிடாது பொருளாதாரத் தடைகளையும் விதித்து, பொதுமக்கள் மீது தாங்கொணாத்துன்பங்களையும் விளைவித்து வருகின்றது இந்திய அரசு. மின்சாரத்தடை, தண்ணீர் வினியோகத்தடை, போக்குவரத்துத் தடை, மீன்பிடித்தடை இப்படியாகப் பல தடைகளை விதித்து எமது மக்களின் நாளாந்த பொருளாதார சமூக வாழ்க்கையை இந்திய அரசு சீர்குலைத்துள்ளது. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப்போல ஏற்கனவே எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்த எமது மக்கள்மீது பாரத அரசானது ஈவிரக்கமற்ற கொடுமைகளைப் புரிவது ஏன்?

விடுதலைப்போராளிகளைப் பொதுமக்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் பயங்கரவாத யுத்தியாகவே இந்திய அரசு இந்தக் கொடுஞ் செயல்களைப் புரிந்து வருகின்றது என்பதை எமது மக்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தேசிய விடுதலைப்போர் நடைபெறும் நாடுகளில் ஆக்கிரமிப்பு வல்லரசுகள் இந்தப் பயமூட்டும் யுக்திகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. சிங்களப் பேரினவாத அரசும் இப்படியான சில யுக்திகளை எமது மக்கள்மீது பரீட்சித்துப் பார்க்கவே செய்தது. இவை பற்றிச் சிறிது பார்ப்போம்.

1) பொது மக்களைத் தொடர்ச்சியாக இராணுவ அட்டூழியத்திற்கு இலக்காக்கி, மனோரீதியான அச்சத்தையும் விரக்தியையும் உண்டுபண்ணுவது. இதனால் பொது மக்களைப் போராட்டத்தின்மீதும், போராளிகள் மீதும் வெறுப்படையச் செய்வது. இப்படியாகப் பொதுமக்களை போராளிகளிடம் இருந்து அன்னியப்படுத்துவது. இறுதியில் போராளிகளைக் காட்டிக்கொடுக்கப் பொதுமக்களை ஊக்குவிப்பது.

படிப்பகம்

www.padippakam.com



2) பொதுமக்களைத் தொடர்ச்சியாக பொருளாதார அழுத்தங்களுக்கு இலக்காக்கி வறுமையின் விழிம்பிற் குத் தள்ளுவது. பொதுமக்களின் துன்பங்களுக்கு எல் லாம் போராளிகள்மீது பழியைப் போட்டு, போரா ளிகள்மீது பொதுமக்களை வெறுப்படையச் செய்வது. பின்பு நிவாரண உதவிகளை வழங்கிப் பொதுமக் களைத் தம்வசப்படுத்துவது.

3) போராளிகளின் பொதுசனத் தகவல் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தைச் செய்வது. இந் தப் பொய்ப் பிரச்சாரம் மூலம் மக்களைக் குழப்பி, போராளிகளுக்கு எதிராக அவர்களைத் திருப்புவது.

இப்படியான நயவஞ்சக யுக்திகளையே இந்தியாவும் கடைப் பிடித்து வருகின்றது. ஆகவே எமது மக்கள் இந்த நாசகாரச் சதிகளுக்குப் பலியாகாமல் மிகவும் விழிப்பாகவும் உறுதியாக வும் இருக்க வேண்டும்.

எமது அன்பார்ந்த மக்களே!

இந்திய அரசானது எம்மை ஆயுதங்களையும் ஒப்படைத்து விட்டுச் சரணாகதி அடையச் சொல்கிறது; இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிபந்தனை அற்ற முறையில் ஆதரிக்கச் சொல் கின்றது; ஜனநாயகப் பாதையைத தழுவி அரசியல் நீரோட் டத்தில் குதிக்கச் சொல்கிறது. இந்த நிபந்தனைகளையெல்லாம் இந்திய அரசு சமாதான வழியில் செல்ல வேண்டும் என்று எமக்கு அன்புக்கரங்களை நீட்டிச் சொல்லட்டும். நல்லெண் ணத்தை மனிதாபிமானக்கண்ணோட்டத்தோடு சொல்லட்டும். இந்தியப்படையினர் யாழ்ப்பாணத்தை ஒரு ரணகளமாக்கி தமிழரின் கல்லறைகள்மீது நின்று கொண்டு, இராணுவப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஆயுதமுனையில் சொல்கிறது. மிரட்டிப் பயமுறுத்தி அடிபணியச் சொல்கிறது.

நாம் ஆயுதத்தில் காதல்கொண்ட அராஜகவாதிகள் அல் லர். நாம் பலாத்காரத்தை வழிபடும் பயங்கரவாதிகள் அல்லர். நாம் யுத்தவெறி கொண்ட, இரத்தவெறி கொண்ட வன்முறையாளர்கள் அல்லர். நாம் சமாதானத்தை விரும்பு கிறோம். எமது மக்கள் சமாதானமாக, நிம்மதியாக, சுயகௌர வத்துடன், சுதந்திரமாக வாழ்வதையே விரும்புகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்கப்பட்ட எமது மக்களின் உரிமையை மீட்டெடுப்பதற்காகவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். அந்த இலட்சியத்திற்காகவே நாம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்திற்காகவே இதுவரை 1000-த்திற்கும் மேற்பட்ட எமது வீரர்கள் உயிரை அர்ப்பணித்துள்ளனர்; எத்தனையோ மகத்தான தியாகங்களைப் புரிந்துள்ளனர்; வியக்கத்தக்க வீரகாவியங்களைப் படைத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்ட வரலாறு என்பது, ஒடுக்கப்பட்ட எமது மக்களின் வீரசுதந்திரப் போராட்ட வரலாறே அன்றி வேறு ஒன்றுமல்ல. எமது வீர வரலாற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எம்மைச் சரணாகதி அடையச் சொல்கிறது இந்திய அரசு. நாம் பாரத நாட்டுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை; இந்திய இராணுவத்துடன் போர் புரிய விரும்பவில்லை. நாம் ஆயுதங்களை கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் நாம் ஆயுதங்களைக் கையளித்து விடுவதால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு கிடைத்து விடுமா? எமது மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வழி பிறக்குமா?

நாம் ஆயுதங்களை கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பிரச்சனைகளுக்கு எத்தகைய தீர்வு முன்வைக்கப்படுகின்றது? மாகாணசபைத் திட்டத்தால் எமது பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படுமா? மாகாண சபைத்திட்டம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா? அப்படியானால் எமது மக்களின் எதிர் காலம் என்ன?

எமது மக்களே நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்!

நாம் கடந்த 40 ஆண்டுகளாக, இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து எமது அடிப்படை உரிமைகளுக்காக, அரசியல் சுதந்திரத்துக்காக, எமது கௌரவத்துக்காகக் கட்டியெழுப்பிய விடுதலைப் போராட்டத்தை 40 நாட்களுக்குள் குழி தோண்டிப் புதைக்க முயல்கிறது இந்திய அரசு.

நாம் ஆயுதங்களை கீழே போட தயாராக இருந்தோம். ஆனால் நாம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணாகதி

படிப்பகம்

www.padippakam.com



அடைவது என்பது, எமது இனத்தின் சரணாகதிக்கு ஒப்பாகும் அல்லவா? விடுதலைப் போராட்டத்தின் இழப்புக்கு ஒப்பாகும் அல்லவா?

நாம் ஏற்கனவே இந்திய அரசின் உறுதிமொழிகளை நம்பி கணிசமான தொகை ஆயுதங்களை ஒப்படைத்தோம். அந்த ஆயுத ஒப்படைப்பின்போது எமது மக்களின் பாதுகாப்பு என்ற பாரிய பொறுப்பையும் இந்திய அரசிடம், இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்தோம் அல்லவா? இந்தத் தார்மீகப் பொறுப்பை இந்திய அரசு கடைப்பிடித்ததா? எமது மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து மனிதாபிமானத்தோடு நடத்தியதா? இல்லவே இல்லை. மாறாக, எமது மக்களைக் கொன்று குவித்துக் கொடுமைப்படுத்தியது அல்லவா? அடித்து மிதித்து எம்மைத் துன்புறுத்தி அவமானப்படுத்தியது அல்லவா? எமது பெண்களைக் கற்பழித்து எமது கௌரவத்துக்கு இழுக்குத் தேடித் தந்தது அல்லவா!

எமது ஆயுதங்களை நாம் கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் என்ன? இந்திய இராணுவம் தனது கொடுமைகளை நிறுத்தி விடுமா? எமது மக்களை நிம்மதியாக வாழவிடுமா? எமது அரசியல் பொருளாதார வாழ்வில், சிவில் நிர்வாகத்தில் தலையீட்டை நிறுத்திக் கொள்ளுமா? சமூக விரோதக் கும்பல்களுக்கும், இனத் துரோகிகளுக்கும் அரசியல் மேடை அமைத்துக்கொடுத்துவரும் அதன் ஆத்திரமூட்டும் செயல்களைக் கைவிடுமா? எமது ஆதரவாளர்களை அடித்துத் துன்புறுத்தி, தடுப்புக்காவலில் வைத்துக் கொண்டிருக்கும் அடாவடித்தனங்களைக் கைவிடுமா?

இந்திய அரசானது எம்மிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்கக் கங்கணம் கட்டி நிற்பது ஏன்? தமிழீழத்தின் சமாதானத்தையும், சகஜ நிலையையும் கொண்டு வருவதற்காகவா? எமது மக்களின் நலன்களைப் பேணுவதற்காகவா? இல்லவே இல்லை. ஜெயவர்த்தனாவையும் சிங்கள ஆளும் கட்சி இன வெறிக்கூட்டத்தையும் திருப்திப்படுத்துவதற்காக அன்றி வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தமிழர் சுதந்திர இயக்கம் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும், அல்லது நிர்மூலமாக்கப்பட வேண்டும். இதற்காகவே ஜெயவர்த்தன இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். இதற்காகவேதான் இந்திய அரசு எம்மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தொடுத்தது.

நாம் ஆயுதங்களை **கீழே போட** தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக வாழ் வழி வகுக்கப்பட வேண்டும். இந்திய அரசானது தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, புலிகளை வேட்டையாடுவதைக் கைவிட்டு, ஆயுதங்களைத் தேடி அலைவதைக் கைவிட்டு எமது மக்களுக்கு சுபீட்சமான வாழ்வை, ஒரு நிரந்தரமான தீர்வைக் காண முயற்சியை எடுக்க வேண்டும். அப்பொழுது நாம் ஆயுதங்களைக் கையளிப்போம்.

எமது அன்பார்ந்த மக்களே!

இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களைக் கண்டு, **நாம் அஞ்சி அடிபணிந்து போனல் நாம் ஜெயவர்த்தன அரசுக்கு அடிமைகளாகப் போக நேரிடும்.** இத்தனை காலமாக நாம் இரத்தம் சிந்திப் போராடியதில் அர்த்தமில்லாமல் போய்விடும். எமது தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் எல்லாம் கடல் நீரில் எழுதிய கதையாகிப் போய்விடும். தமிழனின் வீரமரபில் எழுந்த ஒரு உன்னத வீரகாவியம் மரணித்துக் குப்பைத் தொட்டிக்குள் மறைந்துவிடும். நாம் அடிபணிந்து போனல் அடுத்த பரம்பரை எம்மை மன்னிக்கப் போவதில்லை. நாம் இந்திய இராணுவத்துக்கு அஞ்சவும் கூடாது. எந்த வகையிலும் ஒத்துழைக்கவும் கூடாது.

இந்தியா ஒரு அன்னிய நாடு. இங்கு வந்து எமது மண்ணை ஆக்கிரமித்துக்கொண்டு, இந்திய இராணுவம் எம்மை அடிமைப்படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது. இந்த நடவடிக்கையானது சர்வதேச தர்மங்களுக்கு முற்றிலும் முரணனதாகும். இந்தியாவின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கும், இராணுவ அட்டூழியங்களுக்கும் எதிராகப் பாரதத்திலேயே ஒரு பாரிய எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com


எமது மக்களுக்கு எதிராகத் தான் செய்யும் அட்டூழியங்களையும், அநியாயங்களையும் இந்திய அரசு இன்று உலக சமுதாயத்துக்கு இருட்டடிப்புச் செய்து வருகின்றது. அபாண்டமான பொய்களைத் திரித்து உலகத்தின் மனச்சாட்சியை ஏமாற்றி வருகின்றது. ஆனால் உண்மைக்கும், தர்மத்துக்கும், நீதிக்கும் கல்லறை கட்டிவிட முடியாது. பொய்மையின் திரைகளைக் கிழித்துகொண்டு உண்மை ஒருநாள் வெளிவரத்தான் செய்யும். அப்பொழுது பாரதம் உலக மனச்சாட்சியின் முன் தலைகுனிந்து நிற்கும். அப்போது வரலாறு எமது பக்கம் திரும்பும். அன்றுதான் எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். அன்று வரை நாம் உண்மைக்காக, நீதிக்காக, தர்மத்துக்காக தொடர்ந்து போராடுவோம்.

எமது அன்பார்ந்த மக்களே!

உரிமைப் போராட்டத்தில் உறுதியும், நேர்மையும், எதற்கும் அஞ்சாத திடமும் கொண்ட மக்கள் சமுதாயத்தை எந்த ஒரு வல்லரசும் அடிமை கொள்ள முடியாது என்பதே வரலாற்று உண்மை. இந்த வரலாற்று உண்மையை எமது மக்கள் பாரத நாட்டுக்குப் புகட்டிக்காட்ட வேண்டும்.

அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

டிசம்பர், 1987

படிப்பகம்

www.padippakam.com

# தியாக தீபங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு களங்களில் வீரப்போர் புரிந்து சாதனை பல படைத்த இந்த மாவீரர்கள் இந்திய அரசின் ஒருதலைப்பட்சமான, ஓரவஞ்சனையான நடவடிக்கைகளை எதிர்த்து இந்திய அரசின் துரோகத்தனத்தை உலகஅரங்குக்குத் தோலுரித்துக்காட்ட தம்மைத்தாமே அழித்து தியாகதீபங்களாகச் சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றனர்.




## லெப்டினண்ட் கேர்னல் திலீபன் (பார்த்திபன்)

லெப்டினண்ட் கேர்னல் திலீபன் அவர்கள் இயக்கத்தின் யாழ்மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றியபோதிலும், சிங்கள இராணுவத்தை எதிர்த்து இயக்கம் நடத்திய போராட்டக் களங்களில் இறங்கி விழுப்புண்கள் பல ஏற்றவர். வடமராட்சிச் சமரில் சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிக்குண்டு தாக்கியதில் தனது குடலில் ஒரு பகுதியை இழந்தவர்.

படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்திய மிகப்பெரிய ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் மறியல்கள் என்பவற்றை குறுகியகால அவகாசத்துக்குள் ஒழுங்குசெய்து வெற்றிகரமாக நடத்தியவர் லெப்டினண்ட் கேர்னல் திலீபன். இந்திய அரசின் ஒர வஞ்சனைப் போக்கை உலகுக்கு அம்பலப் படுத்த சாகும்வரை உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை மாய்த்த வன் மாவீரன் திலீபன்.

மாவீரன் திலீபன் சரித்திரம் படைத்த வீரச்சாவின் மூலம் இந்திய அரசின் கபடத்தனத்தை, ஒரவஞ்சனையைத் தோலுரித் துக் காட்டினான்.

## லெப்டினண்ட் கேர்னல் குமரப்பா (இரத்தினபாலா)

எமது இயக்கம் சிங்களப் போலிஸ் நிலையங்கள்மீது நடத் திய பெரிய அதிரடித்தாக்குதல்கள் அனைத்திலும் கலந்து கொண்ட இயக்கத்தின் மூத்த உறுப்பினரான லெப்டினண்ட் கேர்னல் குமரப்பா (இரத்தினபாலா) மட்டக்களப்பு மாவட் டப் பொறுப்பாளராக இருந்து ஆற்றிய இராணுவ, அரசியல் இயக்கப்பணிகள் மட்டக்களப்புப் பகுதியில் குறிப்பாக இஸ் லாமியத்தமிழர்கள் மத்தியில் இயக்கம் வளர்ச்சி பெறக்காரண மாக இருந்தன.



குமரப்பா புலேந்திரன்

படிப்பகம்

www.padippakam.com



மட்டக்களப்பில் அவர் இருந்த முகாமைக் குறிவைத்து 6 முகாம்களிலிருந்து சென்று முற்றுகையிட்ட ஆயிரத்துக்கும் அதிகமான சிங்களப் படைகளைத் தாக்கி, பல கவச வாகனங் களை அழித்து 60 இராணுவத்தினரைக் கொன்றதுடன் இயக்க வீரர்கள் எவருக்கும் எதுவும் ஏற்படாத வகையில் முற்று கையை உடைத்து மீண்ட குமரப்பா யாழ்ப்பாண மாவட்டப் பொறுப்பாளராக பணியாற்றிய வேளையில் இந்திய-இலங்கை அரசுகளின் நயவஞ்சக ஒப்பந்தத்தால் அநியாயமாக உயி ரிழந்தார்.

## லெப்டினண்ட் கேர்னல் புலேந்திரன் (தர்மராசா)

இயக்கத்தின் மூத்த உறுப்பினரான லெப்டினண்ட் கேர் னல் புலேந்திரன் (குணநாயகம் தர்மராசா) இயக்கத்தின் ஏராளமான உறுப்பினர்களுக்குப் பயிற்சியாளராக இருந்து அவர்களைச் சிறந்த போர்வீரர்களாக உருவாக்கியவர்.

இயக்கம் வெற்றிகரமாக நடத்திய பல தாக்குதல்களில் முக் கிய பங்குவகித்ததுடன், 1985 ஜனவரியில் அச்சுவேலியில் காப்டன்பண்டிதரின் முகாமைச் சுற்றி வளைத்து 500க்கு மேற் பட்ட சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையை வெற்றிகரமாக உடைத்துக்கொண்டு தப்பிய லெப்டினண்ட் கேர்னல் புலேந்திரன் இந்திய-இலங்கை அரசுகளின் நய வஞ்சக ஒப்பந்தத்தால் அநியாயமாக உயிரிழந்தார்.

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் குமரப்பா, புலேந்திர னுடன் சயனைட் அருந்தி உயிர்நீத்த ஏனைய பத்து வீரர்கள்.

## மேஜர் அப்துல்லா

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேஜர் அப்துல்லா தலைவர் பிரபாகரனின் மெய்க்காப்பாளராக நீண்டகாலம் கடமையாற்றியவர். அவரது செயற்திறன் காரணமாக கடற் புலிகள் அமைப்பில் பொறுப்பான பணியில் அமர்த்தப் பட்டார்.

## காப்டன் நளன்

பருத்தித் துறையைச் சேர்ந்த காப்டன் நளன் இயக்கத்தின் தொலைத்தொடர்புப் பிரிவில் நீண்டகாலம் பணியாற்றியவர்.

படிப்பகம்

www.padippakam.com







மேஜர் அப்துல்லா காப்டன் நளன்

தலைவர் பிரபாகரனின் பெருமதிப்பைத் தன் நேர்த்தியான செயற்திறன் மூலம் பெற்ற காப்டன் நளன் தலைவர் பிரபாகரனுடனேயே இருந்து பல பொறுப்பான பணிகளை மேற்கொண்டு வந்தார்.

**காப்டன் பழநி,**

**காப்டன் ரகு,**

**தவக்குமார்,**

**மிரேஸ்,**

**அன்பழகன்,**

**ஆனந்த குமார்,**

**ரெஜினேல்ட்,**



காப்டன் பழநி



ரெஜினேல்ட்

இவர்கள் கடற்புலிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எவ்விதமான சூழ்நிலையிலும் இயந்திரப் படகைத் திறமையாகச் செலுத்தும் ஆற்றல் பெற்றவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



### கரன்

வவனியாவைச் சேர்ந்த கரன் நீண்டகால இயக்க உறுப்பினர். இவரது இளைய சகோதரர் சித்தார்த்தர் இயக்கத்தின் லெப்டினண்டாக இருந்து பணியாற்றி கடந்த பெப்ரவரி மாதத்தில் நேர்ந்த வெடிவிபத்தில் வீரமரணம் அடைந்தவர். இவரது மூத்த சகோதரரும் இயக்கத்தில் இருக்கிறார். இவருக்கு திருமணமாகி இரண்டு பிள்ளைகளும் உண்டு.



காப்டன் ரகு



கரன்



தவக்குமார்



ஆனந்த குமார்



மிரேஸ்

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

PARIS



48737391 42238158

படிப்பகம்